**அலுவலக அதிகாரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரால் அரசியல் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவை முன்னிறுத்துதல்**

திரு.மகிந்த தேசப்பிரிய, தலைவர், திரு. நளின் அபேசேகர, PC, உறுப்பினர், பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல், உறுப்பினர்,
இலங்கை தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் செயலகம்,
சரண வீதி,
ராஜகிரிய.
25.10.2019

மதிப்பிற்குரிய திரு.தலைவர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்,

**அலுவலக அதிகாரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரால் அரசியல் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவை முன்னிறுத்துதல்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு தங்களின் ஆதரவை முன்னிறுத்துதல் மற்றும் பின்னிலைப்படுத்துதல் மற்றும் அவ்வாறே தங்களது தனிப்பட்ட அரசியல் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் அலுவலக அதிகாரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபடுகின்ற ஓர் எதிர்மறையான போக்கை பெரும் மதிப்பிற்குரிய உங்களது ஆணைக்குழுவின் இடையீடுகள் கணிசமானளவு குறைத்துள்ளன என நாங்கள் நம்புகிறோம்.

இவ்விதமானதொரு பின்னணியில், 25.10.2019 அன்று கொழும்பு, தாமரைத் தடாக (Nelumpokuna) கேட்போர் அரங்கில், இலங்கை பொதுஜனப் பெரமுன (SLPP) கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர், கோத்தபாய ராஜபக்சவினால் நடாத்தப்பட்ட ஒரு தேர்தல் பிரச்சார முன்னேற்ற நிகழ்வில், இலங்கை அரசாங்க மருத்து அதிகாரிகள் சங்கத்தின் (GMOA) தலைவர், டாக்டர் அநுருத்த பாதெனிய அவர்களால் கலந்து கொண்டமை தொடர்பில் உங்களது கவனத்திற்கு நாங்கள் கொண்டு வருவதற்கு விரும்புகிறோம். நிகழ்வானது, திரு. ராஜபக்ச அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் வெளியிடுதலாக அமைந்திருந்ததுடன் டாக்டர் பாதெனிய முழுநிகழ்விலுமாகக் கலந்து கொண்டமை அவதானிக்கப்பட்டது.

இந்த நடத்தை, அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தாபனவிதிக் கோவையின் மீறுதல் மட்டுமன்றி, தேர்தல் ஆணைக்குழுவினால் 18.09.2019 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 01, 6 (II) இனது ஒரு மீறுதலாகவும் உள்ளது. ஏனைய அரசாங்க சேவைகளினது அலுவலக அதிகாரிகள் இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டும் மற்றும் இதே நடத்தையைப் பின்பற்றுவார்களாயின் ஜனாதிபதித் தேர்தலுக்கு இட்டுச் செல்லும் தேர்தலுக்கு முன்னதான காலப்பகுதி கடுமையான வகையில் விட்டுக்கொடுக்கப்பட்டதாகி விடும் என்பது எங்களது கருத்தாகும்.

ஆகையால், உங்களது பணிப்பின் கீழான ஆணைக்குழு உடனடியாக மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வேண்டிக் கொள்ளவதற்கு நாங்கள் விரும்புகிறோம். ஜனநாயக விழுமியங்களை நிலைநாட்டி, சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான ஒரு தேர்தலை உறுதிசெய்வதற்கு, இது தொடர்பில் உங்களது நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் ஒத்துழைப்பு, பெரிதும் பாராட்டப்படுகிறது.

நன்றி.

மஞ்சுள கஜநாயக்க,
தேசிய ஒருங்கிணைப்பாளர்,
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்.
பிரதிகள்:

திரு. தர்மசேன திசாநாயக்க, தலைவர், பொதுச்சேவை ஆணைக்குழு, பத்தரமுல்ல

திருமதி. வசந்தா பெரேரா, செயலாளர், சுகாதாரம், போசணை மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு, கொழும்பு 10

திரு.ஜகத் அபேசிறிவர்த்தன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (தேர்தல்கள்), இலங்கை பொலிஸ்

பணிப்பாளர், தேசிய தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையம், தேர்தல் ஆணைக்குழு, ராஜகிரிய.